# NTC HOSPITALS
NTC INSTITUTE OF MEDICAL SCIENCES (NIMS)
MULTI SPECIALITY HOSPITAL





**Dr.K.Rajkumar,**
M.S.M.Ch., (SGE) FLTS (Seoul), FMAS
Consultant Surgical Gastroenterologist &
Advanced Laparoscopic & Liver Transplant Surgeon.





**Dr.S.Lakshmi, M.D.(O.G),**
Consultant Gynecologist,
Laparoscopic Surgeon,
Infertility Specialist.



மே 2024 **மருத்துவமனை மலர்** நலம் தரும் நம்பிக்கை


## உடல் நோய் எதிர்ப்பு சக்திக்கு உதவும் மண்ணீரல் வீங்கிய நபருக்கு NTC மருத்துவமனையில் லேப்ரோஸ்கோபி ஆபரேஷன்.



- ☞ NTCமருத்துவமனையில் குடல், கல்லீரல், லேப்ரோஸ்கோபி அறுவை சிகிச்சை நிபுணர் Dr.K.ராஜ்குமார் ஆபரேஷன் செய்து பாதிப்பை சரிசெய்தார்.
- ☞ இந்த ஆபரேஷனுக்கு பின்னர் அந்த நபருக்கு இருந்த மஞ்சள் காமாலை பாதிப்புகள் நீங்கி, சோர்வு இல்லாமல் இயல்பு நிலை அடைந்தார்.

மதுரையைச் சேர்ந்த 70வயது நபர், மஞ்சள் காமாலை பாதிப்புடன் மிகவும், சோர்வுடன் தத்தனேரி கீழவைத்தியநாதபுரம், NTC மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார்.

அவரை பரிசோதனை செய்தபோது, நோய் எதிர்ப்பு சக்திக்கு உதவும் முக்கியமான உறுப்பான மண்ணீரல் 30 செ.மீ அளவில் வீங்கி இருப்பது தெரியவந்தது. பொதுவாக மண்ணீரல் 10 செ.மீ அளவிலேயே இருக்கும். இந்த மண்ணீரல் பாதிப்புக்கு குடல்-கல்லீரல் அறுவை சிகிச்சை நிபுணரும், லேப்ரோஸ்கோபி சர்ஜனுமான Dr.K.ராஜ்குமார் ஆபரேஷன் செய்தார். இந்த ஆபரேஷன் நுண்துளை அறுவை சிகிச்சை எனப்படும் லேப்ரோஸ்கோபி சர்ஜரி மூலம் 6 மணிநேரம் நடைபெற்றது.

இந்த அறுவை சிகிச்சைக்குப் பின்னர், அந்த நபருக்கு மஞ்சள் காமாலை பாதிப்புகள் நீங்கி, 2 நாளில் டிஸ்சார்ஜ் ஆனார். குடல் கல்லீரல் சார்ந்த பிரச்சனைகளுக்கு Dr.K.ராஜ்குமார் தலைமையிலான மருத்துவக்குழு, சிகிச்சை அளித்து குணப்படுத்துகிறது.

## சிறுநீரகத்தில் 100 சிறுநீரகக் கற்களுடன் அவதிப்பட்ட நபருக்கு NTC மருத்துவமனையில் ஆபரேஷன்

- NTC மருத்துவனையின் சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர் ஆபரேஷன் செய்து சிறுநீரகக் கற்களை அகற்றினார்.
- முதுகுவழியாக துளையிட்டு, சிறுநீரகக் கற்கள் அகற்றம்.
- ஆபரேஷனுக்கு பின்னர், அந்த நபருக்கு ஏற்கனவே இருந்த காய்ச்சல், சிறுநீர் கழிக்கும் போது ஏற்பட்ட வலி பாதிப்புகள் நீங்கின.



மதுரையைச் சேர்ந்த 50 வயது நபருக்கு, சில நாட்களாக கடுமையான காய்ச்சல், சிறுநீர் கழிக்கும் போது, வலி, ஆகியவை இருந்தன. இதனால் அவர் மிகவும் பரிதவித்து இருந்தார். இந்த நிலையில் அவர் மதுரை தத்தனேரி கீழ வைத்திநாதபுரத்தில் உள்ள பிரபல NTC மருத்துவமனைக்கு வந்தார்.

அவரை உரிய பரிசோதனை செய்தபோது, சிறுநீரகத்தில் 100க்கும் மேற்பட்ட சிறுநீரக கற்கள் இருப்பதும், அதனால் அவர் பாதிக்கப்பட்டிருப்பதும் தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து அவருக்கு PCNL என்னும், மருத்துவ முறையில் முதுகு பகுதியில், சிறு துளையிட்டு, சிறுநீரகக் கற்கள் அகற்றப்பட்டன. இந்தக் கற்களை அகற்றியதும் அந்த நபருக்கு இருந்த காய்ச்சல் படிப்படியாக நீங்கியது. மேலும் சிறுநீர் கழிக்கும் போது இருந்த கடுமையான வலி பாதிப்பும் நீங்கியது.

இதனால் அந்த நபர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து NTC மருத்துவமனை நிறுவன தலைவர் Dr.K.ராஜ்குமாருக்கும் மருத்துவக்குழுவினருக்கும் நன்றியை தெரிவித்தார்.



## சினைப்பையில், 10 செ.மீ. கட்டி முறுக்கிய நிலையில் வலியுடன் வந்த 17வயது இளம் பெண்ணுக்கு NTC மருத்துவமனையில் நவீன அறுவை சிகிச்சை.

- மகளிர் - மகப்பேறு மருத்துவ நிபுணர் - லேப்ரோ ஸ்கோபி சர்ஜன் Dr.S.லட்சுமி ஆபரேஷன் செய்து, அழுகிய நிலையில் இருந்த கட்டியை அகற்றினார்.
- தழும்பு இல்லாமல், ஆபரேஷன் செய்யப்பட்டது. 2 நாளில் அந்த பெண் வலி இல்லாமல் மகிழ்ச்சியுடன் இல்லம் திரும்பினார்.
- சரியான நேரத்தில் கட்டி அகற்றப்பட்டதை தொடர்ந்து, அந்த 17வயது இளம் பெண்ணுக்கு திருமண வாழ்வில் மகப்பேறு பாதிப்பு ஏதும் இருக்காது.






மதுரையைச் சேர்ந்த 17வயது இளம் பெண் ஒருவர் கடும் வயிற்று வலியுடன் மதுரை தத்தனேரி கீழ வைத்தியநாதபுரம் NTC மருத்துவமனைக்கு வந்தார். அவரை மகளிர், மகப்பேறு மருத்துவ நிபுணரும், லேப்ரோ ஸ்கோபி சர்ஜனுமான Dr.S.லட்சுமி பரிசோதனை செய்தார். இதில் அந்த பெண்ணின் சினைப்பையில் 10 செ.மீ. அளவில் பெரும் கட்டி முறுக்கிய நிலையில் அழுகியவாறு இருப்பது தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து, லேப்ரோ ஸ்கோபி முறையில், சிறு 5 செ.மீ துளை மூலம், அந்த கட்டி அகற்றப்பட்டது. இந்த நவீன அறுவை சிகிச்சையால் அந்த பெண்ணுக்கு, ஆபரேஷன் செய்த இடத்தில் தழும்பு வராது. இந்த ஆபரேஷனுக்குப் பின்னர், அந்த இளம் பெண், வலி பாதிப்பு முற்றிலும் நீங்கி மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினார். சினைப்பை கட்டி, உரிய நேரத்தில் அகற்றப்பட்டதால் அந்த பெண்ணுக்கு, திருமணம் ஆனபின்னர், மகப்பேறு தொடர்பான பாதிப்புகள் வராது. மகளிர் மகப்பேறு சார்ந்த பிரச்சனைகளுக்கு அனுபவம் மிக்க Dr.S.லட்சுமி மருத்துவ சிகிச்சை அளித்து, நல்லதீர்வு அளிக்கிறார். பல ஆண்டுகள் குழந்தைகள் இல்லாத பெண்களுக்கும், நவீன சிகிச்சையில் மகப்பேறு அளிக்கப்படுகிறது.

**சினைப்பை மற்றும் கர்பப்பைக் கட்டிகளை அகற்றுவதற்கு நுண்துளை அறுவை சிகிச்சை எனப்படும் லேப்ராஸ்கோபி மூலம் NTC மருத்துவமனையின் மகளிர் மருத்துவ நிபுணர் Dr.S.லட்சுமி சிகிச்சை அளிக்கிறார். இந்த நுண்துளை அறுவை சிகிச்சையால் எந்தவித தழும்பும் இருக்காது. ஒரே நாளில் டிஸ்சார்ஜ் ஆகி வீடு திரும்பலாம்.**

## இதய ரத்தக்குழாய் - இதய மைட்ரல் வால்வ் பாதிப்புடன் மயங்கிய நிலையில் வந்த தொழிலாளிக்கு NTC மருத்துவமனையில், இதய அறுவை சிகிச்சை.

- ஒரே நேரத்தில், இதய ரத்தக்குழாய் அடைப்பு நீக்கம், மைட்ரல் வால்வு மாற்று ஆபரேஷன் என 2 ஆபரேஷன்களை NTC இதய மருத்துவர் குழு வெற்றிகரமாக செய்தது.
- இந்த ஆபரேஷனுக்குப் பின்னர் அந்த தொழிலாளி குணமடைந்து, நலமுடன் வீடு திரும்பினார்.
- **முதலமைச்சர் காப்பீடு திட்டத்தில் இந்த ஆபரேஷன் செய்யப்பட்டது.**



ராமநாதபுரத்தைச் சேர்ந்த 45வயது நபர், மயங்கிய நிலையில், மதுரை தத்தனேரி கீழவைத்தியநாதபுரம் NTC மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அவரை மருத்துவமனையின், இதய சிகிச்சை மருத்துவக்குழு பரிசோதனை செய்தது. இதில் அந்த நபருக்கு இதய ரத்த குழாயில் அடைப்பு இருப்பதும், இதயமைட்ரல் வால்வு பழுதடைந்து இருப்பதும் தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து இதய ரத்தக்குழாய் ஓட்டம் சீராக இருக்கும் வகையில், அடைப்பு நீக்கப்பட்டது. மேலும் பழுதடைந்த மைட்ரல் வால்வு அகற்றப்பட்டு, மாற்று வால்வ் பொருத்தப்பட்டது.

இதய ரத்தக்குழாய் அடைப்பு, இதய மைட்ரல் வால்வ் பாதிப்பும் ஒரே நேரத்தில் ஆபரேஷன் செய்வது என்பது சவாலான விஷயமாகும்; இருப்பினும், NTC மருத்துவமனையின், அனுபவம் மிக்க இதய சிகிச்சை நிபுணர்கள் வெற்றிகரமாக ஆபரேஷனை செய்து, நோயாளியை குணமடையச் செய்தனர்.

இந்த நபர், கட்டுமானத் தொழிலில் கொத்தனாராக இருப்பவர் அவருக்கு, முதலமைச்சர் காப்பீடு திட்டத்தில் இந்த நவீன இதய சிகிச்சை அளிக்கப்பட்டு குணப்படுத்தப்பட்டது. இந்த ஆபரேஷனுக்கு பின்னர், அந்த நபரின் இதய ரத்த ஓட்டம் சீராக இருப்பதுடன் அன்றாடப்பணிகளும் இயல்பாக செய்யமுடிகிறது.



## மூளைத்திறன் மேம்பாட்டுக்கான கியூப் இயக்கப் பயிற்சி தத்தனேரி திரு.வி.க. மேல்நிலைப் பள்ளியில் வழங்கப்படுவது சிறப்பு.

### கல்வி விளையாட்டு போட்டிகளில் திரு.வி.க. மாணவர்கள் சாதனை.

மதுரை, தத்தனேரி திரு.வி.க. மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களின் மூளைத் திறன் மேம்படுத்துவதற்கான கியூப் இயக்க பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. வாரம் ஒருமுறை இந்த பயிற்சி அளிக்கப்படுவதால் மாணவர்களுக்கும் திறன் அதிகரித்து சாதனை படைக்கிறார்கள் மதுரை மாநகராட்சியில் உள்ள மாநகராட்சி பள்ளிகளில் திரு.வி.க. பள்ளியில் மட்டுமே கியூப் இயக்கப் பயிற்சி அளிக்கப்படுவது சிறப்பம்சம் ஆகும். இந்த பள்ளியில் தமிழ் ஆங்கில வழி மாணவர்சேர்க்கை உண்டு. இந்த பள்ளி மாணவர்கள் 23-24ம் ஆண்டு மாநில அளவில் நடந்த ஜுனியர் பேட்மிண்டன் போட்டியில் பங்கேற்று குறிப்பிடத் தக்க சாதனை படைத்தனர் திரு.வி.க. பள்ளியில் 2 மாணவர்கள் கோவையில் நடைபெற்ற Luna Innovation விண்வெளியாளர் கருத்தரங்கில், சாதனை படைத்து நுண்ணோக்கியை பரிசாக பெற்றனர்.

மாநில அளவில் 1500 மாணவர்கள் கலந்து கொண்ட போட்டியில், திறன்மிக்க 50 மாணவர்களுக்கு நுண்நோக்கி பரிசாக அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை சிறப்பு வருந்தினராக பங்கேற்று மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

NMMS பள்ளி கல்வி உதவித் தொகை தேர்வுக்கும் திரு.வி.க. மாணவர்கள் 3பேர் தேர்வு பெற்றுள்ளனர். முதலமைச்சரின் தமிழ்திறன் கல்வி உதவி தொகையையும் இப்பள்ளி மாணவி பெற்று சாதனை படைத்துள்ளார். இந்த தகவல்களை திரு.வி.க. பள்ளி தலைமை ஆசிரியர் **S.** மரியசெல்வநாதன் கூறினார்.

NTC HOSPITALS
NTC INSTITUTE OF MEDICAL SCIENCES (NIMS)
MULTI SPECIALITY HOSPITAL
Cure for Sure

- 100சதவீத வேலைவாய்ப்பு.
- வெளியூர் மாணவ மாணவியர்களுக்கு தங்குமிடம் இலவசம்.
- குறைந்த கட்டணத்தில் உணவு வசதி.

NTC கல்லூரியில் செவிலியர் படிப்பிற்கான வாய்ப்பு பட்டய படிப்பு

சேர்க்கை நடைபெறுகிறது

2 வருடம்

1. சுகாதார உதவியாளர் (Health Assistant)
2. அறுவை சிகிச்சை உதவியாளர் (OT Assistant)
3. லேப் டெக்னீஷியன் (Lab Technician)
4. டயாலிசிஸ் டெக்னீஷியன் (Dialysis Technician)

1 வருடம்

1. Medical Record Assistant
2. CSST

கல்வித்தகுதி 10 Pass, 12 Pass (or) Fail

மேலும் விபரங்களுக்கு : NTC மருத்துவமனை
187, தத்தனேரி மெயின்ரோடு, வைத்தியநாதபுரம், மதுரை - 18.
முதல்வர் : 98421 45044 அலுவலகம் : 2660064
அலுவலகம் : 93421 57173 2660664



## NTC மருத்துவமனையில் முதியோர் உள்பட அனைத்து நபர்களுக்கும் பிஸியோதெரபி இலவசம்.

- உடல் உறுப்புகளான கை, கால் இயக்கம் சீராக இருக்க பிஸியோதெரபி பயிற்சி, அந்த துறை மருத்துவர்களால் அளிக்கப்படுகிறது.
- முதிய காலத்தில் சளி பிரச்சனையால் அவதிப்படும் நபர்களுக்கு நுரையீரல் சீரான இயக்கத்திற்கும் NTC மருத்துவமனையில் பிஸியோதெரபி நிபுணர் பயிற்சி அளிக்கிறார்.



மதுரை தத்தனேரி கீழவைத்தியநாத புரத்தில் புகழ்பெற்ற NTC மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனையில் பிஸியோதெரபி முதியோர் மற்றும் தேவைப்படும் அனைத்து நபர்களுக்கும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

இயல்முறை மருத்துவம் எனப்படும் பிஸியோதெரபி பயிற்சியில், கை, கால். சீரான இயக்கத்திற்கும், சளிதொல்லை உள்ளவர்களுக்கும் நுரையீரல் சீரான இயக்கத்திற்கான பிஸியொதெரபி பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்த பயிற்சியை அனுபவம் மிக்க பிஸியோதெரபி நிபுணர் NTC மருத்துவமனையின் Dr.R.S.விஷாந்த் வழங்குகிறார்.

நாட்பட்ட நோயில் இருப்பவர்கள், முதியோர் ஆகியோருக்கு உடல் உறுப்புகள் சீராக இயங்க பிஸியோதெரபி பயிற்சி அவசியமாகும். அதே போன்று எலும்பு முறிவுக்கு ஆபரேஷன் செய்த நபர்களும் கை, கால் இயக்க நிலை சீராக இருக்க பிஸியோதெரபி அளிக்கப்படுகிறது. மசாஜ், Heat treatment, PNF Technique, PNF stretching manual technique என பலமுறைகளில் பிஸியோதெரபி பயிற்சி தரப்படுகிறது. இந்த பிஸியோதெரபி பயிற்சி பெற்ற நபர்கள், இந்த பயிற்சிக்குப் பின்னர் ஆரோக்கியமான தரமான இயல்பு வாழ்க்கை மேற்கொள்ளலாம்.

**NTC மருத்துவமனையில் மதுரை நகர் பகுதி மக்களுக்கு ஆம்புலன்ஸ் வசதி இலவசம் ஆகும்.**



## தென் தமிழகத்தில், மருத்துவமனை வளாகத்தில் அமைந்த பிருந்தாவன்

**NTC மருத்துவமனை, பிருந்தாவன் முதியோர் இல்லம் தொடர்புக்கு 6385602664, 0452–2660064, 2260664 என்ற தொலைபேசியில் தொடர்புகொள்ளலாம்.**



மதுரை தத்தனேரி கீழவைத்தியநாதபுரத்தில் உள்ள NTC மருத்துவமனை மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ஆகும். 75 படுக்கை வசதி கொண்ட இந்த மருத்துவமனை வளாகத்தில் மருந்தகம், ஆய்வகம், கேன்டீன், ஆம்புலன்ஸ் வசதி, என அனைத்து மருத்துவ வசதிகளும் உள்ளன. இந்த மருத்துவமனை வளாகத்திலேயே ‘பிருந்தாவன்’ எனப்படும் முதியோர் இல்லம் உள்ளது. இங்கு வயது முதிர்ந்த மற்றும் நீண்ட நாள் நோய் பாதிப்பு உள்ள நபர்களுக்கு தங்கும் வசதி, உணவு வசதி, 24 மணிநேர மருத்துவ கண்காணிப்பு ஆகியவை உள்ளன.

மேலும் இந்த பிருந்தாவன் முதியோர் இல்லத்தில் தங்கி இருப்பவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப தமிழ், ஆங்கில நாளிதழ்கள் தினமும் வழங்கப்படுகின்றன. மேலும் அவர்களது பொழுது போக்கு நிகழ்ச்சிக்கு தொலைக்காட்சி (T.V) வசதி, நடைபயிற்சி மேற்கொள்ள அமைதியான வளாக பின்பகுதி உள்ளன.

இதனைத் தவிர, கலை, கலாசார நிகழ்ச்சி, தங்கி இருப்பவர்களின் பிறந்தநாள் விழாக்கள், தேசிய தின விழாக்கள் ஆகியவை அவர்களது குடுத்பத்தினரைப் போல கொண்டாடப்படுகிறது.

பிருந்தாவன் இல்லத்தில் தங்கி இருக்கும் முதியோர்களுக்கு உடல், கை, கால் இயக்கம், சீராக இருக்க பிஸியோ தெரபி பயிற்சியும் அளிக்கப்படுகிறது. அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப டீ, காபி, டிபன் (பூரி, பொங்கல், இட்லி, தோசை) என்றும் தரமான சத்து உணவுகளும் தினமும் அளிக்கப்படுகின்றன.

வாரத்தில் ஒரு நாள் தங்கி இருப்பவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அசைவ உணவும் அளிக்கப்படும். சைவ உணவு விரும்புவர்களுக்கு தினமும், சைவ உணவு சுகாதாரமுறையில் தயாரிக்கப்பட்டு அளிக்கப்படுகிறது. இதனைத் தவிர அவர்கள் விரும்பும் உள்ளரங்க விளையாட்டு போட்டிகளான கேரம், செஸ் ஆகியவை விளையாடவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

NTC HOSPITALS
NTC INSTITUTE OF MEDICAL SCIENCES (NIMS)

- *மருத்துவமனையில் முதலமைச்சர் காப்பீடு மற்றும் இதர காப்பீடு திட்டங்களில் சிறந்த சிகிச்சை.*
- *மருத்துவமனையில் பிருந்தாவன் முதியோர் இல்லம்.*
- *மகப்பேறு சிகிச்சைக்கு நியாயமான மருத்துவ கட்டணம்.*

*மேலும் விபரங்களுக்கு*

**NTC மருத்துவமனை**

187, தத்தனேரி மெயின் ரோடு, கீழவைத்தியநாதபுரம், மதுரை - 18.
6385602664, 0452-2660064, 2660664 info@ntchospitals.com, www.ntchospitals.com

## NTC மருத்துவமனையின் கல்லூரியில் MASTER IN EMERGENCY MEDICINE COURSE படிப்புக்கு அட்மிஷன்

- *இந்த படிப்பில் சேரும் MBBS மருத்துவ பட்டபடிப்பு மாணவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு உறுதி.*
- SEMI *எனப்படும்* Society for Emergency Medicine India Board-*ன் அங்கீகாரம் பெற்ற படிப்பாக இந்த படிப்பு உள்ளது.*




மதுரை தத்தனேரி கீழவைத்தியநாத புரத்தில், தலைசிறந்த மருத்துவ நிபுணர்களால் NTC மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனை வளாகத்திலேயே, பட்டயபடிப்புகளுக்கான இணை மருத்துவகல்லூரி உள்ளது. இங்கு தற்போது MBBS மாணவர்களுக்கான 3 ஆண்டுகால Master in Emergency Medicine Course-ம் துவங்கப்படுகிறது.

இந்த படிப்பு படிக்கும் மாணவர்கள் MRCEM எனப்படும் Member ship of the Royal College of Emergency Medicine U.K. தேர்வுக்கு தகுதி பெறுவார்கள்.

அனுபவம் மிக்க மருத்துவ நிபுணர்கள் பாடம் போதிக்கின்றனர். திட்டமிடப்பட்ட, பாட வகுப்புகள் இடம்பெற்றுள்ளது. இங்கு படிக்கும் மருத்துவ மாணவர்களுக்கு, படிக்கும் போதே தொடர் மருத்துவ பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இந்த மருத்துவ மனையின் எமர்ஜென்சி பிரிவு 24 மணிநேர ஆய்வகம் ரேடியாலஜி, C.T. ஸ்கேன், அல்ட்ராசவுண்ட் சேவை டயாலிசிஸ் யூனிட், கேத்லேப், CT-OT IVF LAB ஆகியவையும் Department of Emergency Medicine பிரிவுக்கு என 10படுக்கை அறை வசதிகள் விதிமுறைகளுடன் உள்ளன.

NTC *மருத்துவமனை* NABH *எனப்படும்* National Accridited Board for Hospitals *தரச்சான்று பெற்ற, நவீன மருத்துவ தொழில்நுட்ப மருத்துவமனை ஆகும்.*

*வெளிநாட்டில்* MBBS *படித்த மாணவர்கள்* FMGE (Foreign Medical Graduation entrance) MCI (Medical Council of India) *தேர்வில் தகுதிபெற்றவர்கள் இந்த* MEM *படிப்பை படிக்கலாம். இந்த மருத்துவ படிப்பை படிக்க விரும்பும் மருத்துவ மாணவர்கள்* www.ntchospitals.com *என்ற இணைய தளத்திலும்* 9843150092, 9342157173 *என்ற செல்பேசியிலும் தொடர்பு கொள்ளலாம்.*